දුරකථන ) 0112669192 ,0112675011
தொலைபேசி 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 ,0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம்


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXE/01/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2021/10/ 26
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம் அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்று நிருப இல: 02-102/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய நிறுவனத் தலைவர்களும்

## மருந்தாளர் (pharmacy) தரம் II / வகுப்பு II 'அ' பிரிவு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2021

மருந்தாளர் தரம் II / வகுப்பு II 'அ' பிரிவு உத்தியோகத்தர்களின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திட்டத்தின் நான்காம் படிமுறையை எய்துவதற்கு முன்னதாக சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகான் தடைப்பரீட்சையும் திணைக்களப் பரீட்சையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தாள் அறியத்தரப்படுகிறது. (விடயம் தொடர்பான வினாத்தாள் ஆங்கில மொழில் மாத்திரம் நடாத்தப்படும்). பரீட்சை நடைபெறும் திகதி, இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

### 02 தகைமைகள்

மருந்தாளர் வகுப்பு II 'அ' / தரம் II ற்கான தகைமைகளைப்பூர்த்தி செய்துள்ள, இதுவரையிலும் பரீட்சையினைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

கவனிக்கவும்: 2020/12/31 ஆம் திகதியுடன் தரம் II ற்கு ஏற்புடைய சேவைக்காலத்தினை பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடிவடிக்கை எடுக்கவும்.

### 03 விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வண.பத்தேகம விமலவங்சதேரர் மாவத்தை, கொழும்பு- 10 என்னும் முகவரிக்கு

2021.11.30 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என பிரிவுத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" X 4") அளவுடைய கடித உறை மூன்றினையும் (04) (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரியமாதிரிப் படிவத்திற்குக அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

குறிப்பு : விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 – 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 – 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க கூடியவாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**04 பரீட்சைக் கட்டணம்**

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படவோ, அல்லது மீளப் பெறப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

**05 பரீட்சைக்கான அனுமதி**

5.1 ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப் படவில்லையாயின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டுகீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை.
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06 பரீட்சைதிட்டம்

இப்பரீட்சை வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் திணைக்களப் பரீட்சை எனும் இரு பிரிவுகளைக் கொண்டமைந்தது. திணைக்களப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சை, வாய்மூலப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளதுடன் ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகளளைப் பெற வேண்டும்.

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் எனும் இரு விடயங்களை கொண்டமைந்திருப்பதுடன் ஒவ்வொரு விடயத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகள் பெறவேண்டும். மேற்படி பரீட்சையினை ஒரே தடவையில் / பல தடவைகளில் பகுதி பகுதியாகவோ / விடயங்களான் அடிப்படையிலோ பூரணம் செய்ய முடியும். முதற் தடவையாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

07 பரீட்சைப் பாடத் திட்டங்கள்

7.1 **திணைக்களப் பரீட்சை**

7.1.1 **விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சை**

இவ்வினாத்தாள் 03 மணித்தியாலங்களைக் கொண்டது. அமைப்பு வினாக்கள் 08 இனைக் கொண்டிருக்கும். அவற்றில் விரும்பிய 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம் :**

i. ஔடதபாகவியல்
ii. சட்டத்துறை ஔடதபாகவியல் (விஷவர்க்கங்கள், அபின், அபாயமான ஔடதவகைகள் சட்டம், ஒப்பனைப் பொருட்கள், உபகரணங்கள் ஔடதச் சட்டம்)
iii. திணைக்கள செயற்பாட்டு விதிகள்
iv. வருடாந்த மதிப்பீடுகளும் ஔடதவகைகள் கட்டத்துணிகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் மருத்துவ வாயு வகைகள் என்பனவற்றைக் கோருதல்
v. ஔடதவகைகளையும், சத்திரசிகிச்சை உபகரணங்களையும் பிராந்திய ரீதியில் கொள்வனவு செய்தலும் அதன் பணித்திட்டமும்
vi. மேன்மிகைநாள் குறிப்பிடப்பட்ட உற்பத்திகள் காலம் கடந்த அல்லது பாதுகாப்பற்ற மருந்துவகைகள் கட்டத்துணிகளையும் சத்திரசிகிச்சை உபகரணங்களையும் அப்புறப்படுத்திக் கொள்ளும் செயல்முறையும் வெற்று அடைப்புக்களையும் பாத்திரங்களையும் அப்புறப்படுத்தும் ளெசயன்முறை.
vii. ஔடத வகைகள் கட்டுத்துணிகள் சத்திரசிகிச்சை உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுதலும், களஞ்சியப்படுத்தல், வழங்குதல், கணக்கீடு என்பவற்றின் பணித்திட்டம்
viii. பயன்படுத்த முடியாததும் பழுதடைந்ததுமான ஔடதவகைகள் சத்திர சிகிச்சை உபகரணங்களை அப்புறப்படுத்தும் செயன்முறைகள்

7.1.2 **விடயம் தொடர்பான பிரயோகப் பரீட்சை**

விடயம் சார்ந்த இலுமைகள் மற்றும் செயற்திறன் என்பவற்றுடன் தொடர்புடைய பிரயோக பரிசோதனையாகும். விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சையுடன் தொடர்பான விடயப்பரப்பு இப்பரீட்சைக்கும் எடுத்துக்கொள்ளப்படும். (காலம் பரிசோதனையைப் பொறுத்து தீர்மாணிக்கப்படும்)

வைத்தியசாலைகள் மற்றும் ஒசுசலைகளில் நோயாளர் தொடர்பாக பயன்படுத்தப்படும் அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்திகள் தொடர்பாக தொழில் அறிவை வழங்கும் மாதிரிகள் தொடர்பான பிரயோக மதிப்பீட்டிற்கு உற்படுத்தப்படும். மருந்து விலை நிர்ணய துண்டு மற்றும் கட்டில் மலைமாற்றுச் சிட்டு மாதிரிகள் வழங்கப்பட்டு அவற்றிற்குரிய விடயம் தொடர்பான காரணிகள் தொடர்பான பிரயோக அறிவு பரீட்சிக்கப்படும். இந்த பரீட்சையின் போது உசாத்துணைகளை நூல்களை துணையாகக்கொள்ள ஆணமதிக்கப்படும் (BP/BNF/Hospital Formulary etc.)

**7.1.3 விடயம் தொடர்பான வாய்மூலப் பரீட்சை**

விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சையுடன் தொடர்பான விடயப்பரப்பு இப்பரீட்சைக்கும் எடுத்துக்கொள்ளப்படும்.

**7.2 வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

இவ்வினாத்தாள் 02 மணித்தியாலங்களைக் கொண்டதாகும். தரப்படும் 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்

**7.2.1 தாபன விதிக்கோவை வினாத்தாள்**

XV. கற்கை, பயிற்சி அல்லது கடமையின் நிமித்தம் வெளிநாடு செல்லல்

XVI. விடுமுறைப் பிரயாணங்கள்

XXIII. சிலவகை நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் அவை தொடர்பான நிபந்தனைகள்

XXIV. சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்

XXV. தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சலுகைகள்

XXVII. தொடர்பிணைப்பு வழி

XXVIII. நிருவாக நடைமுறைகளும், செயல்முறைகளும்

XXX. அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பாக அரசுக்குள்ள தத்துவங்கள்

XXXIII. சட்ட மதியுரைகளும், சட்ட நடவடிக்கைகளும்

XLVII. பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும்

XLVIII. ஒழுக்காற்று நடைமுறைகள்

**7.2.2 நிதிப்பிரமாண வினாத்தாள்**

அமைப்பு வினாக்களைக் கொண்ட 02 மணித்தியாலங்களுக்கான வினாப்பத்திரமாகும். தரப்படும் 07 வினாக்களில் விரும்பிய 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

VI. அரசாங்கப் பணம் முதலியவற்றின் கட்டுக்காப்பும் கட்டுநிதிகளும் வங்கிக் கணக்குகளும், அரசாங்க பணக் கட்டுக்காப்பு, சுற்றாய்வு சபைகள், மேலதிகப் பற்று வங்கிக் கணக்கு (நி.பி. 315 – 396 வரை)

XIII. வழங்கு பொருட்களும் கட்டுவேலைகளும் சேவைகளும் :
வழங்கு பொருட்கள், பணத்துக்கு கொள்வனவு செய்தல், களஞ்சிய சுற்றாய்வு, களஞ்சியப்படுத்தல் நடைமுறை, ஒப்பந்தங்கள், டெண்டர் நடைமுறையில் இருந்து வெளியில் செல்லுதல் (நி.பி. 708 – 775 வரை)

08 **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் / பிரிவில் / விசேட இயக்கத்தில் கடமையாற்றும் உரிய உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். இந்த தகவல்களை **www.health.gov.lk** எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழிமூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

Gamage

**ஷாமிக எச். கமகே**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிர்வாகம் (02)**
**செயலாரின் பொருட்டு**
**சுகாதார அமைச்சு**

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

**EXE**

மாதிரி விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

**மருந்தாளர் (pharmacy) தரம் II / வகுப்பு II 'அ' பிரிவு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2021**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களை பின்னால் இட்டு சிங்களத்தில் / தமிழில் எழுதவும்) : ....................................................................................

(ii) விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களை பின்னால் இட்டு ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (சிங்களத்தில்) / தமிழில்:

....................................................................................

(iv) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் III ற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்த திகதி

....................................................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ....................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

(v) மின்னஞ்சல் முகவரி : ....................................................................

02 நீங்கள் தோற்றுறுவதற்கு விரும்பும் விடயத்திற்கு முன்னதாக தரப்பட்டுள்ள கூண்டில் (✓) அடையாளத்தை இடவும். தோற்றவிரும்பாத விடயங்களுக்கு (✗) அடையாளத்தை இடவும்.

விடயம் தொடர்பான அறிவு ☐ தாபன விதிக்கோவை ☐ நிதிப்பிரமாணம் ☐

பிரயோகப் பரீட்சை ☐ விடயம் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை ☐

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்.

(சிங்களத்தில்)....................................................................................

(தமிழில்) ....................................................................................

(ஆ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐

- மாகாணசபையினால் ☐

(இ) அதற்குரிய மாவட்டம் : ....................................................................

(ஈ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9" X 4" அளவு ரூபா.35.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 03 இணைக்கப்பட்டு உள்ளதா? ....................................................................

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..............................................

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| |
|---|
| முத்திரைக் கூண்டு |

06. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : ..............................  ..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ள தென்றும் உறுதிப்படுத்துகின்றேன்

திகதி : ..............................  ..........................................................

பெயர், கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ..........................................................................................
என்பவர் இந்நிறுவத்தில் பணிபுரிவதுடன் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், விண்ணப்பதாரி இப்பரீட்சைக்கு தோற்றுவது முதற் தடவை / முதற் தடவை அல்ல என்பதையும், * **தரம் III ற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்துள்ளார் என்பதனையும், அவருக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளது / எதுவுமில்லை என்பதையும்,** உரியவாறு ரூ. ..... பெறுமதியான முத்திரை * ஒட்டப்பட்டுள்ளது/ஒட்ட வேண்டிய அவசியமில்லை என்பதையும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் தனிநபர் கோவையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக சரியானது என்பதையும், எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................  ....................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09. **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்..........................................என்பவர் எனது நிறுவனத்தில்.............. ............................................. உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..............................  ....................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம் (இறப்பர் முத்திரை இட்பட வேண்டும்)

* தேவையற்ற விடயங்களை கீறிட்டு வெட்டி விடவும்